மேலொப்பம் /கடித எண்.ஒய்3/21139/2016

கூடுதல் தலைமைச் செயலர்/வணிகவரி
ஆணையர் அலுவலகம்,
சென்னை–5.
நாள்.14.03.2019.

அரசாணை (2ப) எண்.9, வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள்.08.02.2019 இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

ஒம்./– ப்பி. ரகுநந்தன்
கூடுதல் தலைமைச் செயலர்/வணிகவரி
ஆணையருக்காக

**பெறுநர்**
திருமதி. எஸ். விஜயலட்சுமி, இளநிலை உதவியாளர்,
கூடுதல் தலைமைச் செயலர்/வணிகவரி ஆணையர் அலுவலகம்,
சென்னை–5.

**நகல்**
உதவியாளர் `ஒய்1` – பிரிவு (பணிப்பதிவேட்டில் பதியும் பொருட்டு)
இருப்பு கோப்பு–ஒய்3.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

கண்காணிப்பாளர்

<u>சுருக்கம்</u>

பணியாளரமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – கூடுதல் தலைமைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் அலுவலகம், சென்னை–5 – திருமதி. எஸ்.விஜயலட்சுமி என்பவர் கருணையடிப்படையில் 06.12.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>வணிகவரி மற்றும் பதிவுத்(அ2) துறை</u>

அரசாணை (2ப) எண்.9

நாள்: 08.02.2019
விளம்பி, தை–25
திருவள்ளுவர் ஆண்டு, 2050
படிக்கப்பட்டன:

1. இணை ஆணையர் (நிர்வாகம்), சென்னை–5 அவர்களின் செயல்முறைகள் எண். ஒய்3/21139/2016, நாள் 30.11.2017.
2. கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையரின் கடித எண். ஒய்3/21139/2016, நாள் 01.11.2018.
3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.

*****

<u>ஆணை:</u>

வணிகவரித் துறையின் சென்னை–5, கூடுதல் தலைமைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் அலுவலகத்தில், அலுவலக உதவியாளராகப் பணிபுரியும் போது 08.06.2016 அன்று மறைந்த திரு. ஜி.மனோகரன் என்பவரின் மனைவி திருமதி. எஸ். விஜயலட்சுமி என்பவர் தமக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 04.08.2016 அன்று விண்ணப்பித்துள்ளார். திருமதி. எஸ்.விஜயலட்சுமி, இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி, தனியர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறத் தகுதியுடையவராக அறியப்பட்டு, மேற்படி கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட சென்னை–5, இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறைகளின்படி வணிகவரித் துறையின் சென்னை–5, கூடுதல் தலைமைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் அலுவலகத்திற்கு தனியர் ஒதுக்கீடு செய்யப்பட்டு 06.12.2017 முற்பகல் முதல் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி. எஸ்.விஜயலட்சுமி என்பவருக்கு, அவர் இளநிலை உதவியாளராகப் பணியேற்ற நாளான 06.12.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்ய மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/ வணிகவரி ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

2. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வணிகவரி ஆணையரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டதில், திருமதி. எஸ்.விஜயலட்சுமி அவர்கள் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்குத் தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதியான அதாவது இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், மேலும், தனியரின் பணிவரன்முறை தொடர்பான அனைத்து

ஆவணங்கள் / சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்றும் உறுதி செய்யப்படுகிறது.

3. பார்வை மூன்றில் கண்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. இந்நிலையில், கூடுதல் தலைமைச் செயலாளர் / வணிகவரி ஆணையரின் பரிந்துரையை ஏற்று, வணிகவரித் துறையில் சென்னை–5, கூடுதல் தலைமைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் அலுவலகத்தில், அலுவலக உதவியாளராகப் பணிபுரியும் போது 08.06.2016 அன்று காலமான திரு ஜி.மனோகரன் என்பவரது மனைவி திருமதி எஸ்.விஜயலட்சுமி அவர்களுக்குக் கருணையடிப்படையிலான பணி நியமனம் செய்யப்பட்ட நாளன்று அப்பணியிடத்திற்கு தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் வணிகவரித் துறையில் சென்னை–5, கூடுதல் தலைமைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் அலுவலகத்தில், அவர் பணியில் சேர்ந்த நாளான 06.12.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப்படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதுமிருப்பின், அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.23727/ட்டி–1/2018–1, நாள் 31.01.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.3552/ஜி2/2019, நாள் 6.2.2019 ஆகியவற்றில் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.பாலச்சந்திரன்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்:</u>

திருமதி. எஸ்.விஜயலட்சுமி, இளநிலை உதவியாளர்,
கூடுதல் தலைமைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் அலுவலகம்,
சென்னை–5.
(கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் வழியாக)
கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் வழியாக)

<u>நகல்:</u>

இணை ஆணையர் (நிர்வாகம்), சென்னை–5.
(கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் வழியாக)
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, சென்னை – 9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்